Ontario

ONTARIO IMMIGRATION
IMMIGRATION EN ONTARIO

**ஒன்டாரியோவில் ஒரு புது வாழ்வை கட்டியெழுப்புதல்**

புதிதாக வருவோருக்கு ஒரு வழிகாட்டி

## கீழ்க்காண்பனபற்றி கற்றுக்கொள்ளுதல்:

## உங்கள் புதிய வசிப்பிடமும் சமூகமும்

ஒன்டாரியோவுக்கு புதியவராக, உங்களுக்கு பல கேள்விகள் இருக்கலாம். கீழ்க்காண்பன பற்றி அதிகம் கற்றுக்கொள்ள இந்த வழிகாட்டி உங்களுக்கு உதவும்:

- உங்கள் சமூகத்தில் சேவைகளைக் கண்டடைதல்
- வேலைகளும் பயிற்சியும் தேடுதல்
- உங்கள் மொழித் திறன்களை மேம்படுத்தல்
- அநேக வகையான வேறு உதவிகளைப் பெறுதல்

**ஆரம்பித்தல்**

ஒரு புதிய சமூகத்துக்கும், ஒரு புதிய வாழ்க்கை முறைக்கும் பழக்கப்பட்டுக்கொள்ள காலம் எடுக்கும். சில புதியவர்கள் விரைவாகவும் இலகுவாகவும் ஒன்டாரியோவுக்குப் பழக்கப்பட்டுவிடுவார்கள். உதாரணத்துக்கு, உங்களுக்கு உதவக்கூடிய உங்கள் நன்பர்கள் அல்லது குடும்பத்தார் இங்கே இருக்கலாம். மற்றவர்கள் தங்களை ஒன்டாரியோவில் நிலைப்படுத்திக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கலாம்.

**எங்கே உதவி பெறலாம்**

**குடியமர்வுச் சேவைகள்**

புதிதாக வருவோருக்கு, குறிப்பாக அவர்கள் ஒன்டாரியோவுக்கு வந்தது முதல் சில மாதங்களுக்கு அடிக்கடி உதவி தேவைப்படும். உங்களுக்குத் தேவையான உதவியைத் தரக்கூடிய பல சேவைகள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்வது அவசியம். ‘குடியமர்வுச் சேவைகள்’ (‘settlement services’) என அழைக்கப்படும் இச்சேவைகள், ஒன்டாரியோவின் பல சமூகங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை இலவசமாக கிடைப்பதோடு அநேக சந்தர்ப்பங்களில் பல மொழிகளிலும் உங்களுக்கு உதவிகளைத் தரலாம். குடியமர்வுச் சேவைகள் உங்களுக்கு உதவக்கூடிய சில வழிகள் இதோ:

- உங்கள் புதிய சமூகம் பற்றிய கேள்விகளுக்கு பதிலளித்தல்
- நீங்கள் ஒரு வேலையைக் கண்டடைய அல்லது மேலதிக பயிற்சிபெற உதவுதல்
- ஒரு பாடசாலை அல்லது பிள்ளைப் பராமரிப்பைக் கண்டடைதல்
- சுகநல சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்
- உங்களுக்குத் தேவையான அரசாங்க மற்றும் சமூக சேவைகளைக் கண்டடைதல்

- ஆவணங்களை மொழிபெயர்த்தல் அல்லது சேவைகளுக்கான வாய்மொழிபெயர்ப்பு
- நீங்கள் ஆங்கில/பிரெஞ்ச் வகுப்புகளை கண்டடைய உதவுதல்
- நீங்கள் வாழ்வதற்கு ஒரு இடத்தைக் கண்டடைய உதவுதல்
- நீங்கள் பத்திரங்களை நிரப்ப உதவுதல்

**உங்களுக்கு அருகிலுள்ள குடியமர்வுச் சேவையைக் கண்டடைவது எப்படி**

ஒன்டாரியோவில் உள்ள அநேக சமூகங்கள் புதிதாக வருவோருக்காக குடியமர்வுச் சேவைகளைக் கொண்டுள்ளன. உங்கள் சமூகத்தில் ஒரு சேவையைக் கண்டடைய , ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தில் 'நீங்கள் வருகைதந்த பின்' ('After You Arrive') என்ற பகுதிக்குச் செல்லுங்கள். முகவரி: www.OntarioImmigration.ca.

**ஒரு விவரப்பட்டியல்: ஒன்டாரியோவில் குடியமர்வது**

கனடாவுக்கு வந்தபின் புதியவர்கள் எடுக்கும் பொதுவான படிகளில் சில இதோ. இவற்றிற்கும், நீங்கள் எடுக்கத்தேவையான வேறுபல படிகளுக்கும் உங்கள் சமூகத்தில் உள்ள குடியமர்வுச் சேவைகள் உதவமுடியும்:

- ✓ வாழ்வதற்கு ஒரு இடம் கண்டடைதல்
- ✓ சோசியல் இன்சூரன்ஸ் நம்பருக்கு விண்ணப்பித்தல் (SIN)
- ✓ ஒன்டாரியோ சுகநல அட்டைக்கு விண்ணப்பித்தல் (OHIP)
- ✓ வங்கியில் ஒரு கணக்கைத் திறப்பது
- ✓ ஒன்டாரியோவில் வேலைசெய்வது பற்றிய தகவல் சேர்ப்பது
- ✓ உங்களுக்குத் தேவையான சேவைகளை உங்கள் வசிப்பிடத்திற்கு அருகாமையில் கண்டடைதல்
- ✓ ஒரு மருத்துவர், பல் மருத்துவர் அல்லது மற்ற சுகநல சேவைகளின் இருப்பிடத்தைக் கண்டடைதல்
- ✓ நீங்கள் ஒரு வேலையைத் தேடுவதற்கு உதவும் எம்ப்ளாய்மென்ட் நிலையத்தை தொடர்புகொள்ளுதல்
- ✓ ஒரு பொதுசன நூலகம் மற்றும் வேறு சமூக சேவைகளைக் கண்டடைதல்
- ✓ வேலை செய்பவராக அல்லது வாடகைக்கு குடியிருப்பவராக உங்கள் உரிமைகளைப் பற்றிய தகவல் பெறுதல்
- ✓ உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலையைக் கண்டடைதல்.
- ✓ கனடா பிள்ளை வரி நன்மைகள் (சைல்ட் டக்ஸ் பெனிபிட் -CCTB)க்கு விண்ணப்பித்தல்
- ✓ உங்கள் சமூகத்தின் வரைபடம் ஒன்றைப் பெறுதல் மற்றும் பொதுசன போக்குவரத்து பற்றி கற்றறிதல்
- ✓ உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் மொழி வகுப்புகளைக் கண்டடைதல்
- ✓ உங்களுக்குத் தேவையான பொருட்களை எங்கே வாங்குவதென்று கற்றறிதல்
- ✓ சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தல்

**மொழிப் பயிற்சிச் சேவைகள்**

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் ஆகிய இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளைக் கனடா கொண்டுள்ளது. உங்கள் சமூகத்தின் மொழி மற்றும் வேலைத்தலத்தில் பயன்படுத்தப்படுகிற மொழியில் நீங்கள் பேச்சுத் தொடர்புகொள்ளக் கூடியதாக இருப்பது முக்கியம். புதிதாக வருவோரில் பலர் கனடாவுக்கு வருமுன்பே ஆங்கிலம் கற்றிருக்கிறார்கள். உங்கள் மொழித் திறன்களை மேம்படுத்த உதவும் பல சேவைகளும் ஒன்டாரியோவில் உள்ளன. மேலும் கற்றுக்கொள்ள, ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தின் 'ஆங்கிலம் கற்றுக்கொள்ளுங்கள்' ('Learn English') என்ற பகுதிக்குச் செல்லுங்கள். முகவரி: www.OntarioImmigration.ca.

**புதிதாக வருவோருக்கான வேறு சேவைகள்**

பல, வேறு வகையான சமூக சேவைகளும் உங்களுக்கு உதவக்கூடும். அவை உட்படுத்துவன:

- வேலைச் சேவைகள்
- கல்விச் சேவைகள்
- பொதுசன நூலகங்கள்
- சமூகத் தகவல் நிலையங்கள்
- சமூக சுகநல நிலையங்கள்
- சமூக பொழுதுபோக்கு நிலையங்கள்

**வேலைச் சேவைகள்**

பல்வேறு விதமான வேலை மற்றும் விருப்பமான வேலை (career) வாய்ப்புகளை ஒன்டாரியோ கொண்டுள்ளது. பின்வருவன பற்றி உங்களுக்கு மிக அருகாமையில் இருக்கும் குடியமர்வுச் சேவையிடம் கேளுங்கள்:

- **வேலை தேடும் பட்டறை வகுப்புகள்:** இவை உங்கள் வேலை தேடும் திறன்களை மேம்படுத்தக்கூடும்.
- **மென்டோரிங் திட்டங்கள்:** இவை உங்கள் உத்தியோகத்தில் இருக்கும் ஒருவரை சந்திக்க உங்களுக்கு உதவக்கூடும்.
- **வேலைக்கு அமர்த்தல் / வேலையில் பயிற்சித் திட்டங்கள்:** இவை உங்களுக்குத் தேவையான கனேடிய அனுபவத்தைப் பெற உதவக்கூடும்.
- **பாலப் பயிற்சித் திட்டங்கள்:** இவை உங்கள் திறன்களைத் தரம் உயர்த்தவும் உங்கள் உத்தியோகத்துக்குள் அதி விரைவாக பிரவேசிக்கவும் உங்களுக்கு உதவக்கூடும்.

**நீங்கள் ஒரு உத்தியோகத்தில் வேலை செய்பவரா?**

உங்கள் துறையில் எவ்வாறு வேலைசெய்வது என்பது பற்றி, நீங்கள் வருமுன்பே, உங்களால் முடிந்த மட்டும் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் மருத்துவர் அல்லது ஆசிரியர் போன்ற உத்தியோகஸ்தரானால், ஒன்டாரியோ உலகளாவிய அனுபவம் (GEO): சர்வதேச அளவில் பயிற்சிபெற்றோருக்கான வழிமுறை மற்றும் மூலவளங்களுக்கான நிலையம் மூலம் உதவி பெறலாம். ஒன்டாரியோவில் உத்தியோகம் செய்வதற்கு தகுதி பெறுவது எப்படி என்று, சர்வதேச அளவில் பயிற்சிபெற்ற தனிநபர்கள் அறிந்துகொள்ள GEO உதவுகிறது. GEO மற்றும் ஒன்டாரியோவில் வேலை செய்வதுபற்றி அதிகம் கற்றுக்கொள்ள: ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தின், 'வேலைசெய்தல்' ('Working') பகுதிக்கு செல்லுங்கள். முகவரி: www.OntarioImmigration.ca.

**கல்விச் சேவைகள்**

நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க வேண்டியிருக்கலாம். அல்லது உங்கள் சொந்தக் கல்வியை நீங்கள் தரம் உயர்த்த வேண்டியதாக இருக்கலாம். மேலும் கற்றுக்கொள்ள ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தின் 'படித்தல்' ('Studying') பகுதிக்கு செல்லுங்கள். முகவரி: www.OntarioImmigration.ca.

**பொதுசன நூலகங்கள்**

பொதுசன நூலகங்கள் ஒன்டாரியோவின் அநேகமான சமூகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை பல சேவைகளை இலவசமாக அளிக்கின்றன. புத்தகங்கள், இசை, திரைப்படங்கள் மற்றும் வேறு பொருட்களை இரவலாகப் பெற்றுக்கொள்ள, உங்கள் உள்ளூர் நூலகத்தில் நீங்கள் சேர்ந்துகொள்ளலாம். சில நூலகங்கள் பல மொழிகளில் பொருட்களைக் கொண்டுள்ளன. அநேகமான நூலகங்கள் , உங்களுக்கு இலவசமாக இன்டர்னெட் பாவனையையும் தரலாம். நீங்கள் சமுகத்தை அறிந்துகொள்ள உதவக்கூடிய திட்டங்களையும் பல நூலகங்கள் கொண்டுள்ளன.

**சமூகத் தகவல் நிலையங்கள்**

நீங்கள் வாழுமிடத்தில் சேவைகளைக் கண்டடைய சமூகத் தகவல் நிலையங்கள் உங்களுக்கு உதவ முடியும். உங்களுக்கு மிக அருகில் இருக்கும் சமூகத் தகவல் நிலையத்தை கீழ்க் காண்பனவற்றை செய்வதன்மூலம் நீங்கள் கண்டடையலாம்:

- உங்கள் தொலைபேசியில் 211ஐ சுழற்றுதல் (நீங்கள் ஒன்டாரியோவில் அல்லது நயாகரா பிராந்தியம் அல்லது சிம்கோ கவுன்டியில் வசிப்பவரானால்)

- ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தின் 'நீங்கள் வருகைதந்த பின்' ('After You Arrive') என்ற பகுதிக்கு செல்லுதல். முகவரி: www.OntarioImmigration.ca.

**சமூக சுகநல நிலையங்கள்**

சமூக சுகநல நிலையங்கள், சுகநல பராமரிப்பு மற்றும் சுகநல முன்னேற்ற சேவைகளை உங்கள் சமூகத்தில் வழங்குகின்றன. உங்கள் ஆரோக்கியம் பற்றிய கல்வி மற்றும் அறிவுரை தருகின்ற, மருத்துவர்கள், தாதிகள், டையட்டிஷன்கள், ஆலோசகர்கள் மற்றும் சமூக சேவகர்களை அவை கொண்டுள்ளன. இளைஞர் ஆதரவு சேவைகள், முதியோரின் விஸ்தரிப்பு சேவைகள் (outreach services), பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கான திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி சேவைகளையும் அவை கொண்டுள்ளன.

**சமூக பொழுதுபோக்கு நிலையங்கள்**

நீங்கள் பாவிக்கக்கூடிய சமூகத் திட்டங்கள் மற்றும் பொதுசன பொழுதுபோக்கு நிலையங்களை ஒன்டாரியோவின் ஒவ்வொரு நகரமும் கொண்டுள்ளது. ஸ்கேட்டிங் அரீனா, நீச்சல் தடாகங்கள் அல்லது தேகப்பயிற்சி சாலைகளை சில நிலையங்கள் கொண்டுள்ளன. அநேகமான திட்டங்கள் மற்றும் வசதிகள் இலவசம், இல்லையேல் உபயோகிப்பதற்கு அதிக செலவை உட்படுத்தாது.

**எங்கே அதிகம் கற்றறியலாம்**

ஒன்டாரியோவில் வாழுதல், வேலை செய்தல், படித்தல் பற்றி மேலும் கற்றறிய விரும்புகிறீர்களா? ஒன்டாரியோவின் குடிவரவு வலைப்பக்கத்துக்கு செல்லுங்கள்.
முகவரி:www.OntarioImmigration.ca.